தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 255/ந/2022
நாள் 03.01.2023

திருமதி. மாது,
கிருஷ்ணகிரி. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
கிருஷ்ணகிரி நகராட்சி. – எதிர் மனுதாரர்

கிருஷ்ணகிரி, புதுப்பேட்டை, பாரதிதாசன் தெரு, கதவு எண்.47/26 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. மாது என்பவரின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.12.2022 அன்று பெறப்பட்டு 255/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கிருஷ்ணகிரி, புதுப்பேட்டை, பாரதிதாசன் தெரு, கதவு எண்.47/26 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. மாது என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"எனது கணவர் திரு.C.முனிராஜ் என்பவர் கிருஷ்ணகிரி நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி வந்தார். அவர் 24.02.2017 அன்று பணியிடையே காலமாகிவிட்டார். அவர் கணக்கில் உள்ள ஈட்டிய மற்றும் ஈட்டா விடுப்புக்கான ஊதியத்தை வழங்க கோரி பலமுறை மனு அளித்திருந்தேன். ஆனால் எனக்கு இதுநாள் வரை மேற்படி தொகை வழங்கப்படவில்லை. எனவே தயவுகூர்ந்து எனது கணவரின் ஈட்டிய மற்றும் ஈட்டா விடுப்புக்கான ஊதிய தொகையினை அவரின் நேரடி வாரிசான எனக்கு பெற்று தர ஆவன செய்யுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 15.12.2022 நாளிட்ட கடிதம் மூலம் கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் தனது 22.12.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"கிருஷ்ணகிரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை பணியாளராகப் பணிபுரிந்து 24.02.2017 அன்று பணியிடையே காலமான திரு.சி.முனிராஜ் அவர்களுக்கு வழங்க வேண்டிய விடுப்பு பணப்பயன்கள் அனைத்தும் (ரூ.2,29,073/–) அன்னாரது மனைவி திருமதி.மாது அவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது என்பதை இதன் மூலம் பணிந்து தெரிவித்து கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையரும் 28.12.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.12.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி. மாது, 28.12.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

(5) எதிர்மனுதாரரான கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் 28.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கிருஷ்ணகிரி நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் தூய்மைப் பணியாளராகப் பணியாற்றி பணியிடையே கடந்த 24.2.2017 அன்று காலமான திரு. சி. முனிராஜ் என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய ஈட்டிய விடுப்பிற்கான பணப்பயன்கள் ரூ.2,29,073/–க்கான காசோலை (காசோலை எண் 227497 நாள் 22.12.2022) திரு. சி. முனிராஜ் என்பவரின் மனைவி திருமதி.எம்.மாது என்பவருக்கு கடந்த 23.12.2022 அன்று வழங்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கிருஷ்ணகிரி மாவட்டம், புதுப்பேட்டையைச் சார்ந்த மனுதாரர் திருமதி.மாது என்பவர் தனது முறையீட்டு மனுவில், கிருஷ்ணகிரி நகராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து வந்த மனுதாரரின் கணவர் திரு.சி.முனிராஜ் என்பவர் 24.02.2017 அன்று பணியிடையில் காலமானதை தொடர்ந்து அவருக்கு சேர வேண்டிய ஈட்டிய மற்றும் ஈட்டா விடுப்புக்கான பணப்பலன்கள் இந்நாள்வரை கிருஷ்ணகிரி நகராட்சியால் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை என புகாராக தெரிவித்துள்ளார். திரு.சி.முனிராஜ் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விடுப்பு பணப்பயன்கள் அனைத்தும் (ரூ 2,29,073/–) வழங்கப்பட்டுவிட்டது என கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணியாற்றி வந்த மனுதாரரின் கணவர் திரு.C.முனிராஜ் என்பவர் பணியிடையில் 24.02.2017 அன்று காலமாகி, அவருக்கு சேரவேண்டிய ஓய்வூதிய பலன்களுள் ஒன்றான விடுப்பு பணப்பயன்கள் அனைத்தும் கிருஷ்ணகிரி நகராட்சியால் உடனடியாக வழங்கப்படாமல் 5 ஆண்டுகளுக்கு மேல் கிருஷ்ணகிரி நகராட்சி அலுவலர்கள் காலந்தாழ்த்தியுள்ளதையும், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த முறையீட்டு மனு மீதான விசாரணையை எதிர்கொள்ளும் சமயத்தில் அவசர அவசரமாக 23.12.2022 அன்று பணப்பயன்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது. கணவரை இழந்து வாடும் மனுதாரரின் குடும்ப சூழ்நிலையினை கருத்திற் கொள்ளாமல், ஓய்வூதியப் பணப்பயன்களை பொறுப்பற்ற முறையில் காலந்தாழ்த்தி வழங்கிய கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையரின் செயலினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இனி வருங்காலங்களில் நகராட்சி பணியாளர்களின் ஓய்வூதிய பணப்பயன்களை உடனுக்குடன் வழங்குவதற்கு தனி கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

The DMA is directed to take disciplinary action against the concerned for the heartless delay of 5 years to settle the Earned Leave monetary benefits in the case of a deceased sanitary worker who died on 24.02.2017. This is sheer criminal negligence and indifference on the part of the delinquent officers right from the Municipal Commissioner. The Supreme Court in a recent verdict has imposed a fine of Rs.1 lakh for similar delay in settling the post-retirement benefits of a Sweeper of Tamil Nadu State. Hence the DMA is instructed to send a circular to all the

Municipalities to adhere to timely disbursement of post-retirement benefits to avoid unnecessary and avoidable petitioning like this. This is wanton omission of duties by the Municipal Commissioners and RDMAs who are supposed to review such pending items in the office of the Municipal Commissioner. The RDMAs concerned should be also shaken up for their carelessness and apathy.

2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.மாது,
47/26, பாரதிதாசன் தெரு, புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி – 635 001.

2) ஆணையாளர், கிருஷ்ணகிரி நகராட்சி,
கிருஷ்ணகிரி – 635 001.

3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சி நிர்வாக மண்டல அலுவலகம்,
சேலம் – 636 007.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக